# 15 பெற்றோருக்கு மதிப்பளிப்போம்



படம் 15.1 பெற்றோரை வணங்குவோம்

தந்தையே இறை அன்பே
என் அன்பு அம்மா
உமது அரவணைப்பில் நிதமும் காத்திடுவீர்

பத்து மாதம் என்னை உம் வயிற்றில் வைத்தே
காத்திட்ட அன்பு அம்மா
இரத்தத்தைப் பாலாக்கி அன்பையும் சேர்த்தூட்டி
என்னை போசித்த அம்மா
(தந்தையே இறை அன்பே)

தியாகங்கள் எனக்காகப் பல செய்தே
என்னை காக்கும் என் அப்பா
வியர்வை சிந்தியே சீராட்டி பாராட்டி
வளர்க்கும் என் அன்பு அப்பா
(தந்தையே இறை அன்பே)

எனக்காக தம் வாழ்வை அர்ப்பணிக்கும்
என் அன்புப் பெற்றோர்
அன்பின் மறு உரு தியாகத்தின் திருவுரு
குரு பெரு அரும் பெற்றோர்.
(தந்தையே இறை அன்பே)



இலவச விநியோகத்திற்காக

ஆசிரியர் :- இந்தப் பாடலைப் பாடும்போது, உங்களுக்குள் ஏற்பட்ட உணர்வு என்ன?

கொட்வின் :- எமது பெற்றோருக்காக இறைவனிடம் செபிக்க வேண்டும் என்ற உணர்வு ஏற்படுகின்றது.

ரெபேக்கா :- எமது பெற்றோர் எம்மை மிகவும் அன்பு செய்கின்றார்கள், பாதுகாத்துக்கொள்கின்றார்கள், எனவே நாமும் எமது பெற்றோரை அன்பு செய்ய வேண்டும், அவர்களுக்குக் கீழ்ப்படிய வேண்டும். அப்படித் தானே டீச்சர்?

ஆசிரியர் :- சரி பிள்ளைகளே, இறைவனிடமிருந்து எமக்குக் கிடைத்த வாழ்க்கை, நம்பிக்கை ஆகிய இரண்டு பரிசுகளும் எமது பெற்றோரின் வழியாகக் கிடைத்தன. எனவே இறைவனுக்கு அடுத்தபடியாக எமது பெற்றோரை அன்பு செய்து மதிப்பளிக்க வேண்டும்.

ரெபேக்கா :- பத்துக் கட்டளைகளில் நான்காவது கட்டளையில் பெற்றோரை மதிக்க வேண்டுமென்று தானே கூறப்படுகிறது?

ஆசிரியர் :- ஆம் ரெபேக்கா பத்துக் கட்டளைகளை இரண்டு பிரதான பிரிவுகளாகப் பிரிக்க முடியும். முதலாவது ஒரே இறைவனை முழுமனதுடன் விசுவசித்தல், இரண்டாவது பிரிவில் அயலவரை அன்பு செய்யும் முறை கூறப்படுகின்றது. இதன்படி இரண்டாவது பகுதியில் முதலாவதாக எமக்குக் கூறுவது பெற்றோரை மதிக்க வேண்டும் என்பதாகும். எனவே இக்கட்டளை மிகவும் முக்கியமானது என இப்போது உங்களுக்கு நன்றாக விளங்கியிருக்கும் அல்லவா?

கொட்வின் :- டீச்சர், ஒரு நாள் எமது குருவானவர் மறையுரையின் போது நான்காம் கட்டளையின்படி பெற்றோரைப்

போன்றே எமது சமயத் தலைவர்கள், ஆசிரியர்கள், முதியோர்கள், அரசியல் தலைவர்கள் ஆகியோருக்கும் மரியாதை செலுத்த வேண்டும் என்று கூறினார்.

ஆசிரியர் :- நீங்கள் கூறியது சரி கொட்வின், நான்காம் கட்டளையில் நீங்கள் கூறியவர்கள் அனைவரையும் மதித்து, கீழ்ப்படிய வேண்டும் என்று கூறப் படுகின்றது. அப்படியாயின் பிள்ளைகளே இன்று முதல் வீட்டில், பாடசாலையில், ஆலயத்தில், சமுதாயத்தில் பெற்றோருக்கும் பெரியவர்களுக்கும் மதிப்பளித்தலின் மூலம் இறை கட்டளையின்படி வாழ முயற்சி செய்யுங்கள்.

மேலே உள்ள உரையாடலின் மூலம் ''பெற்றோரை மதித்தல்'' என்னும் கட்டளை தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. எனினும் இன்று சமுதாயத்தில் இக்கட்டளையை நிறைவேற்றாத பல செயல்களைக் காணக்கூடியதாய் உள்ளன. அவ்வாறான சந்தர்ப்பங்களில், அதைப் பற்றி விளக்கமளித்து இறைபிள்ளைகளாக வாழ, வழி காட்ட வேண்டும். நான்காம் கட்டளைப்படி வாழ நீர் ஆற்ற வேண்டிய கடமைகள் கீழே அட்டவணையில் தரப்பட்டுள்ளன. அவற்றை உமது வாழ்வில் கடைப்பிடித்து வாழ முயற்சி செய்க.

| | |
|---|---|
| பெற்றோர் மட்டில் உள்ள கடமைகள் | ★ அவர்களை மதித்தல், கீழ்ப்படிதல்<br>★ வீட்டு வேலைகளின்போது உதவுதல்<br>★ வீட்டில் காணப்படும் குறைபாடு, பிரச்சினையை விளங்கிச் செயல்படுதல்.<br>★ பெற்றோரின் சுகயீனம் மற்றும் பிரச்சினைகளின்போது அவர்களுக்கு உதவுதல்.<br>★ பெற்றோரை அவர்களது வயோதிப காலத்தின்போது, மனவேதனை அடைய விடாமல் நன்கு கவனித்தல்.<br>★ பெற்றோருக்காகத் தினமும் செபித்தல். |

| | |
|---|---|
| அருட்பணியாளர், அருட் சகோதர, சகோதரிகள் மட்டில் எமது கடமைகள். | ★ அருட்பணியாளர், அருட்சகோதர, சகோதரிகளுக்கு மதிப்பளித்தல், கீழ்ப்படிதல்.<br>★ பங்குத் தந்தைக்குப் பங்கின் பணிகளில் உதவுதல்.<br>★ பொதுநிலையினரின் அப்போஸ்தலப் பணியில் இணைந்துப் பணிபுரிதல்.<br>★ திருவழிபாடுகளில் மறைக்கல்வி பணிகளில் உதவுதல். |
| பாடசாலை மட்டில் உள்ள கடமைகள் | ★ அதிபர், ஆசிரிய - ஆசிரியைகள், மாணவத் தலைவர் - தலைவி ஆகியோருக்கு மதிப்பளித்தல், கீழ்ப்படிதல்.<br>★ பாடசாலையில் தமது கடமை, பொறுப்புக்களை இயன்றளவு நிறைவேற்றல்.<br>★ பாடசாலை சட்டதிட்டங்களைக் கடைப்பிடித்தல்.<br>★ இலவசப் பாடநூல், நூல் நிலையம், புத்தகங்கள் மற்றும் வேறு பொருள்களைப் பாதுகாத்தல். |
| நாட்டின் மட்டில் உள்ள கடமைகள் | ★ நாட்டுத் தலைவர்களுக்கு மரியாதை செலுத்துதல், மதிப்பளித்தல்.<br>★ நாட்டு மக்களுக்காகவும் தலைவர்களுக்காகவும் செபித்தல்.<br>★ அரசாங்க, பொது உடமைகளைப் பாதுகாத்தல்.<br>★ இயற்கை வளங்களை வீண்விரயம் செய்யாமல் பயன்படுத்தல்.<br>★ நாட்டின் சட்டத்திட்டங்களைக் கடைப்பிடித்தல்.<br>★ நாட்டின் அபிவிருத்திகளில் ஆற்றலையும் திறமையையும் பயன்படுத்தல்.<br>★ நாட்டின் அமைதிக்காக அர்ப்பணித்தல். |

**நான்காம் கட்டளையின்படி வாழ**
**எனது உறுதிமொழி**

நான் எனது பெற்றோரையும் குருக்கள் துறவியரையும் ஆசிரிய - ஆசிரியைகளையும் நாட்டுத் தலைவர்கள் மற்றும் முதியோரையும் அன்பு செய்வேன்; கீழ்ப்படிவேன், மரியாதை செலுத்துவேன். இவர்கள் அனைவர் சார்பாகவும் நான், எனது பங்கு, எனது பாடசாலை, எனது தாய் நாடு மட்டில் எனது கடமைகளைச் சிறு வயது முதல் தவறாமல் நிறைவேற்றுவேன் என உறுதியளிக்கின்றேன்.

## செயற்பாடு

1. நான்காம் கட்டளையைக் கடைப்பிடித்து வாழப் பின்பற்றக் கூடிய வழிகள் நான்கு தருக.
2. ''பெற்றோருக்கு மதிப்பளிப்போம்'' என்ற தலைப்பில், உமது வகுப்பில் சுவரொட்டி ஒன்றைக் தயாரிக்குக.



**வாழ்க்கைக்கு...**

- Sk®£®AÀ» x B ] ›¯÷µõk •v÷¯õºCÀ»®JßøÓ £õºøÁ° ha ö\À»Ä®. A[SÒÍ •v÷¯õ¸hß Pøu² [PÒ, AÁºPÐUSa ö\Â©k [PÒ.
- vÚ•® Ãmi¼¸¢x öÁÎ÷¯ö\ÀÁuØS •ß ö£Ø÷Óõøµ Án [Qa ö\ÀÁuØS¨ £ÇQU öPõÒÍÄ®.